திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், எங்கள் கொங்கு நாட்டின் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

கோவை தெற்கு தொகுதிக்குட்பட்ட பகுதியில் அண்ணா காய்கறி market உள்ளது. இங்கு கோவை, நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து அதிகளவில் காய்கறிகள் வருகின்றன. அவற்றை பாதுகாக்க குளிர்பதன வசதியுடன்கூடிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திலே மட்டும் மொத்தம் 12 குளிர்பதன கிடங்குகள் இருக்கின்றன. எனவே, கோவை தெற்கு தொகுதிக்கு தேவையிருப்பின், ஆய்வுகளை மேற்கொண்டு அங்கு குளிர்பதன கிடங்கு அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

கிராம நிருவாக அலுவலகம்

***35780—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 5]

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், கீழ்செம்பாளூரில் கிராம நிருவாக அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கீழ்செம்பாளூர் கிராமத்திற்கான கிராம நிருவாக அலுவலகக் கட்டடம், செம்பாளூர் வருவாய் கிராமத்தில் உள்ளடங்கிய எட்டுபுலிக்காடு உட்கிராமத்திலே அமைந்திருக்கிறது. அக்கட்டடம் பழுதடைந்துள்ள நிலையிலே உள்ளதால், கீழ்செம்பாளூர் கிராமத்தில் புல எண் 124/13 மற்றும் 124/14–ல் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கல்யாணி சுந்தரி அம்மன் கோயிலில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், கீழ்செம்பாளூர் வருவாய் கிராமத்தில், கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அமைக்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையோடு, பொது மக்களும் நீண்ட நாட்களாக அந்தக் கோரிக்கையை வைத்திருப்பதன் அடிப்படையில், கீழ்செம்பாளூர் கிராமத்தில் இடம் தேர்வு செய்து, கிராம நிருவாக அலுவலகம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரச்சினையின் அவசியம் கருதி, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை என்றாலும் நான் இந்தக் கேள்வியை எழுப்புகிறேன். பட்டுக்கோட்டை வட்டம், தமிழ்நாட்டில் உள்ள வட்டங்களிலே மிகப் பெரிய வட்டமாகும். இந்த வட்டத்தை நிருவாக வசதியின் அவசியம் கருதி, இரண்டாகப் பிரிக்க*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய வட்டம் உருவாக்குவதற்குத் தேவையான பரப்பளவு, மக்கள் தொகை, வருவாய் கிராமங்கள் இருக்குமாயின், அதை மாண்புமிகு முதலமைச்சரின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, புதிய வருவாய் வட்டத்தை உருவாக்க பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். இந்த துணைக் கேள்வியைக் கேட்க அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்கி என்னுடைய கேள்வியைக் கேட்கிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறிவித்தார்கள். தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் 35 ஊராட்சிகளும், ஒரு

2019 ஜூலை 5]

பேரூராட்சியும் உள்ளன. இதில் 26 ஊராட்சிகள் ஆத்தூர் தாலுகாவுடனும், 9 ஊராட்சிகள் கெங்கவல்லி வட்டத்தோடும் இணைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் நிறைந்த பகுதியாகவும், மலைப்பாங்கான பகுதியாகவும் இருப்பதால் ஏற்கெனவே இதைப் பிரிப்பதற்கு நான் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைவாசல், வி.கூட்ரோடு பகுதியில் பண்ணை வளாகம், கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். தலைவாசலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் ஒன்றை அமைப்பதற்கு போதுமான இடவசதியும் அங்கே உள்ளது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது அறிவித்தபடி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று தலைவாசலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தலைவாசலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, அங்கே வாழும் மக்கள் தொகை, பரப்பளவு, வருவாய் கிராமங்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில்தான் புதிய வருவாய் வட்டம் உருவாக்க பரிந்துரை செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தலைவாசலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைப்பதற்குரிய அவசியத்தினை இந்த அவையில் எடுத்து வைத்திருக்கிறார். ஆகவே, மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தியாகும்பட்சத்தில், முன்னுரிமையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப புதிய வருவாய் வட்டத்தை உருவாக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*